**தலைப்பு 116 – வியாபார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 116 – வியாபார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வியாபார வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ரூபா 10,000,000 பெறுமதியான ஒரு மோட்டார் வாகனம் நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை அறிக்கையில் உள்ளடக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,193,790 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் இரண்டு அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் அந்த உபகரணங்கள் நிதியற்ற சொத்துக் கூற்றிலிருந்து நீக்கப்படாமையின் காரணமாக அத்தொகையால் சொத்துக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இராஜாங்க அமைச்சு இரத்துச் செய்யப்பட்டு இந்த அமைச்சிற்கு ஒன்று சேர்க்கப்பட்டதோடு அதில் காணப்பட்ட பொருட்களை இந்த அமைச்சிற்கு கொண்டு வரும் போது அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் திணைக்கங்களிடமிருந்து பெற்ற வேண்டுதல்களின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்கள் வழங்கப்படும். அந்த அமைச்சின் சொத்துக்கள் | -மேற்படி- |

| | |
|---|---|
| | தொடர்பான தகவல்களை CIGAS கணனி முறைமைக்கு அந்த அமைச்சினால் உள்ளடக்கப்பட்டிருந்த தனால் ஒப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் தற்பொழுது நிதியற்ற சொத்துக்கள் கூற்றிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | | ிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு** | | **இணக்கமின்மை** | | | |
| **(அ) இலங்கை சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103(அ) மற்றும் 104 | (அ) | இராஜாங்க அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 12 வகையைச் சேர்ந்த பொருட்களின் 42 விடயங்களில் பற்றாக்குறைப் பொருட்கள் காணப்பட்ட போதிலும் அது சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர் களுக்கு அறிக்கையிடுதல் மற்றும் அதற்குப் பொறுப்புக் | இராஜாங்க அமைச்சு இரத்துச் செய்யப்பட்டு இந்த அமைச்சிற்கு ஒன்று சேர்க்கப்பட்டதோடு அதில் சேவையாற்றிய சில பதவிநிலை உத்தியோகத்தர்களுடன் கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்திற்கு பதிவேட்டுப் பொருட்களை எடுத்துச் சென்றிருந்ததுடன் இன்னும் சிலர் இந்த அமைச்சு கட்டிடங்களுக்கு வந்திருந்தனர். 2023 மார்ச் மாதமளவில் பதிவேட்டுப் பொருட்களுக்கு பொறுப்பாக செயற்பட்ட | உரிய உத்தியோகத்தர் களுக்கு அறிக்கையிடுவதற்கு மற்றும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூறவேண்டியவர்களை நிர்ணயித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகததர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. அப்பொருட்களை எடுத்து வருவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அப்போது வரை பொருள் இருப்பு பதிவேட்டினை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் பொருள் இருப்பு பதிவேடு வழங்கப்பட்டிருக்காததனால் பௌதீக ரீதியாக பொருட்களை ஒப்படைத்தல் மற்றும் பொறுப்பேற்றல் கையொப்பமிட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | |
| | | (ஆ) 2023 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகிய 02 வாகனங்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | அமைச்சின் எரிபொருள் பதிவேட்டின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது 11 வாகனங்களுக்காக ரூபா 1,792,291 பெறுமதியான 5,512 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு வாகனத்திற்குமான ஓட்ட அட்டவணை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் | தாமதங்கள் இடம்பெற்றுள்ளன. எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எரிபொருள் பயன்படுத்திய முறைமை தொடர்பாக காட்டும் 2023 ஆம் ஆண்டிற்கான ஓட்ட அட்டவணை எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | | | |
| | 4 ஆம் பந்தி | 2023 ஆம் ஆண்டிற்காக மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அனைத்து ஆளணியினருக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் II ஆம் பகுதி 8.1.3 ஆம் பந்தி | இராஜாங்க அமைச்சின் சொத்துக்களை அமைச்சிற்கு மாற்றும் போது உரிய அமைச்சின் இரண்டு நபர்களால் அச்சொத:துக்களை மதிப்பீடு செய்வதற்கு அது சம்பந்தமான நிபுணத்துவம் உள்ள நபர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட வேண்டியதுடன் அக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டுப் பெறுமதிக்கு சொத்துக்களை மாற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அமைச்சு அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு இரத்துச் செய்யப்பட்டு இந்த அமைச்சிற்கு ஒன்று சேர்க்கப்பட்டதோடு அதில் சேவையாற்றிய சில பதவிநிலை உத்தியோகத்தர்களுடன் கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்திற்கு பதிவேட்டுப் பொருட்களை எடுத்துச் சென்றிருந்ததுடன் இன்னும் சிலர் இந்த அமைச்சு கட்டிடங்களுக்கு வந்திருந்தனர். 2023 மார்ச் மாதமளவில் பதிவேட்டுப் பொருட்களுக்கு பொறுப்பாக செயற்பட்ட உத்தியோகததர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. அப்பொருட்களை எடுத்து வருவதற்காக ஒரு குழு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நியமிக்கப்பட்டிருந்ததுடன் அப்போது வரை பொருள் இருப்பு பதிவேட்டினை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் பொருள் இருப்பு பதிவேடு வழங்கப்பட்டிருக்காததனால் பௌதீக ரீதியாக பொருட்களை ஒப்படைத்தல் மற்றும் பொறுப்பேற்றல் கையொப்பமிட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2022 ஏப்ரல் 04 ஆந் திகதிய 05/2022 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(ii) ஆம் பிரிவு | இடமாற்றம் கிடைக்கின்ற உத்தியோகத்தர்களால் உரிய நிறுவனத்தின் எந்த நிதியற்ற சொத்தினையும் எடுத்துச்செல்லாதிருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களால் 08 கணனி துணைக் கருவிகள் இடமாற்றம் பெற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் இடமாற்றத்தின் போது சேவையிலிருந்து விடுவிக்கையில் பதிவேட்டுப் பொருட்களை ஒப்படைத்தல் சம்பந்தமாக உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் தளமாடியின் 2,178 சதுர அடி அளவானவற்றில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கடைகள் 2022 ஒக்தோபர் மாதத்திலிருந்து 2023 ஆகஸ்ட் மாதம் வரை கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்தினாலும் 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து கணக்காய்வுத் திகதி வரையும் உமன்தாவ கிரீன் ஹட் எனும் | 2023 ஆம் ஆண்டின் சனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, யூலை, செப்தெம்பர், ஒக்தோபர், நவம்பர் ஆகிய மாதங்களின் மின்சாரப் பட்டியல் மற்றும் 2023 ஆம் ஆண்டின் செப்தம்பர் மற்றும் ஒக்தோபர் | உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெயருள்ள நிறுவனத்தினாலும் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக அமைச்சு செலவுத் தலைப்பின் மூலம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 5,414,565 வாடகைப் பணம், மின்சாரப் பட்டியல், நீர்ப்பட்டியல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முறையான உடன்படிக்கையின் அடிப்படையில் உரிய நிறுவனங்களிலிருந்து அப்பணத்தை அறவீடு செய்வதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அக்கடைகளை ஸ்தாபிக்கும் தொடக்கச் செலவுகளாக ரூபா 2,000,000 பணம் 2021 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | மாதங்களின் வாடகைப் பணம் தற்பொழுது பூரணப்படுத்தப்பட்டுள் ளது. | |
| (ஆ) | அமைச்சினால் 2023 யூன் 16 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 12 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 02 ஆண்டுகள் ஒப்பந்த காலத்திற்கு 05 வியாபார கண்காட்சி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் 03 முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் நியமனங்களின் சட்டரீதியான தன்மை, ஆட்சேர்ப்பு நடைமுறை, அவர்களின் படிகளைத் தீர்மானிக்கும் அடிப்படை, கடமைகளை ஒப்படைத்தல், கடமைக்கு சமூகமளிக்கும் இடம், அண்மைய மேற்பார்வை உத்தியோகத்தர், கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத்துமூல அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் ரூபா 1,911,667 பணம் சம்பளங்களும் படிகளுமாக மேற்கூறிய உத்தியோகத்ரத்களுக்கு 2023 யூலையிலிருந்து 2024 பெப்ரவரி வரை சந்தைக்குப் பொறுப்பான | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத்திலிருந்து செலுத்தப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | (i) | தேசிய வியாபாரக் கொள்கையை தயாரித்து பூர்த்திசெய்தல் | தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள தேசிய வியாபாரக் கொள்கையின் வரைபு சனாதிபதியின் அலுவலகத்திலுள்ள சர்வதேச வியாபாரப் பிரிவுத் தலைவரின் பங்குபற்றலில் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு உத்தியோகத்தர்களுடன் மீளாய்வு உதவியினைப் பெற்று உலகளாவிய வியாபார தரத்தினை கவனத்திற்கு எடுத்து இன்னும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வியாபாரக் கொள்கையைத் தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு உரிய தரவு முறைமையைப் பேணுதல், அந்த தரவு முறைமையை நாளதுவரையாக்குதல் மற்றும் தரவுகளை வெளித்தகவல்கள் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் ஒரு பொறிமுறையினைத் தயாரித்தல் | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (iii) | தேசிய புலமைச் சொத்தினைப் பாதுகாப்பதற்காக பேணிக்காக்கும் நடைமுறையினை அமுல்ப்படுத்துவதற்காக வழிகாட்டுதல் | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேசிய சந்தையில் உருவாகின்ற விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவதற்கான தலையீட்டாளர்களாக செயற்படுதல் அமைச்சின் செயற்பாடாக இருந்த போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சந்தையில் சீனி, முட்டை, கேஸ், பசளை, பால்மாவு, கீரி சம்பா, போன்ற பொருட்களின் அதிக அளவான தட்டுப்பாட்டு நிலைமை காணப்பட்டதனால் விலைகள் அதிகரித்திருந்ததுடன் இப்பொருட்களின் இருப்பு பற்றாக்குறையாக இருத்தல் சம்பந்தமாக பாவனையாளர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரசபை போதியளவு எண்ணிக்கையான சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டிருக்காததுடன் அமைச்சின் மூலமும் அது தொடர்பாக முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடக்க செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பாவனையாளர்களை நன்றாகப் பாதுகாப்பதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சட்டங்களை நாளதுவரையாக்குதலும் திருத்தம் செய்தலும். துரித நடவடிக்கையாக இருந்த போதிலும் 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச்சட்டம், 2003 இன் 36 ஆம் இலக்க தேசிய புலமைச் சொத்து அதிகாரச்சட்டம் மற்றும் 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளின் தரத்தை நியமப்படுத்தல் சேவை அதிகாரச் சட்டம் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் காய்கறி, பழங்கள், கேஸ், பெற்றோல் உள்ளடங்கலாக பிரதான வியாபாரப் பொருட்கள் தொடர்பாக அமைச்சின் உள்ளக வியாபாரப் பிரிவினால் 50 சதவீதம் செயல்முன்னேற்றம் காணப்படுகின்றது என செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் காட்டப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக எந்த அறிக்கையும் வழங்கப்பட்டிருக்காததுடன் பிரதான வியாபார பொருட்களுக்கு (வியாபார சுருக்க குறிப்பு) உரிய ஒவ்வொரு வரிசை அமைச்சினாலும் பேணப்பட வேண்டிய இருப்பு அளவுகள் மற்றும் ஒவ்வொரு மாதங்களிலும் காணப்படுகின்ற உள்ளபடியான இருப்பு அளவுகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் அமைச்சின் கடமையாக இருந்த போதிலும் அத்தகவல்களைச் சேகரிப்பதற்கு நிரந்தரமான ஒருங்கிணைப்பு பொறிமுறை பேணப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை ஒருங்கிணைப்புச செய்தல் ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கிணங்க தொடர்ச்சியான வழி காட்டலினை மேற்கொள்ளல், ஆலோசனைகளை வழங்குதல், கூட்டங்கள்/ செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்துதல் முதலிய மேற்கொள்ளப்படுகின்றன. அந்த நிறுவனங்களுக்கு மத்தியில் பாவனையாளர்களுக்கு எதிர் விளைவுள்ள நிறுவனமான பாவனையாளர் விவகார அதிகாரசபை தொடர்பாக தேவையான வழிகாட்டல்களை வழங்குதல், கூட்டங்கள்/ கலந்துரையாடல் செயல்முன்னேற்ற மீளாய்வு, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு ஒரு தடவை மேற்கொள்வதன் மூலம் அவர்களுக்கு தேவையான ஆலோசனைகள்/ வழிகாட்டல்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தகவல்களைச் சேகரிப்பதற்கு முறையான ஒருங்கிணைப்பு பொறிமுறையினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இந்திய கடன் திட்டத்தின் (ICL) கீழ் இறக்குமதி ஒருங்கிணைப்பு நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தும் இறக்குமதி செய்ய வேண்டிய பொருட்கள், பகுப்பாய்வு அறிக்கை அல்லது ஒவ்வொரு இறக்குமதியாளர்களால் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட பொருட்களின் அளவுகளின் தகவல்கள் அமைச்சினால் பேணப்பட்டிருக்கவில்லை. | இந்திய கடன் திட்டத்திற்குரிய செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2023 ஆம் ஆண்டிற்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் அத்தியவசியமான உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கவில்லை. இறக்குமதியாளர்கள் தொடர்பாக வழங்கப்பட்ட கடிதங்களை உள்ளடக்கிய கோவைகள்/ கோவை மென்பொருள் பிரதிகள் (Soft Copies) ஆக பேணப்பட்டன. | அத்தியவசியமான தகவல்களை முறைப்படியாக பேணுதல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 செப்தெம்பர் 28 ஆந் திகதிய அமைப/21/1543/313/053 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் தற்பொழுது அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை அமைச்சிற்கு முறைப்படியாக ஒப்படைப்பதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொறுப்பேற்கப்பட்டிருக்காத வாகனங்களின் எண்ணிக்கை 20 ஆகும். | இதற்கு மத்தியில் சில வாகனங்கள் தற்பொழுது பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன் பொறுப்பேற்கப்படாத வாகனங்களை பொறுப்பேற்பதற்காக நிதி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சிற்கு வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டது. | வாகனங்களை முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் 05 வாகனங்கள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக ஓடும் நிலையில் இல்லாததனால் அமைச்சில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 02 வாகனங்கள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்யும் நடவடிக்கைக்காக கராஜிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அந்த வாகனங்கள் சம்பந்தமாக 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(ஆ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டி இருந்ததனால் வாகனங்களை திருத்தம் செய்வதற்கு அனுப்பிவைக்கப்படாதிருந்தது டன் தற்பொழுது கேள்வி கோரப்பட்டுள்ளது. அவ்வாறே முகவர் நிறுவனங்களில் உதிரிப்பாகங்கள் இல்லாததனால் திருத்தம் செய்வதற்கு ீணடகாலம் எடுத்துள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இராஜாங்க அமைச்சிடமிருந்து கிடைத்த 54 நிதியற்ற சொத்துக்கள் தொகுதியின் 534 அலுவலக உபகரண விடயங்கள் மீளாய்வாண்டின் இறுதி | தற்பொழு அமைச்சின் பல்வேறு பிரிவுகளிடமிருந்தும் தேவைப்பாடு கோரப்பட்டுள்ளது. அதற்றிகணங்க எதிர்காலத்தில் 01/2020 ஆம் | சொத்துக்களை சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையும் வியாபார அமைச்சு வளவிலும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கிளையிலும் விளைவற்றுக் காணப்பட்டன. | இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இராஜாங்க அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 50 பொருட்களின் 116 விடயங்களில் அமைச்சினால் 04 வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் அவற்றிற்காக பெறுதல் கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் 05 வழங்கல் கட்டளைக்களுக்குரிய பொருட்களின் 80 விடயங்கள் தொடர்பான பெறுமதிகளை வழங்கும் கட்டளைகளில் குறிப்பிடப்படாது வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிபக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தியின் கீழ் இலக்குகளாக உணவுத்தட்டுப்பாடு ஏற்படாத வகையில் உணவு ஒதுக்கத்தினை பேணுவதனை மேற்பார்வை செய்தல் காட்டப்பட்டிருந்தும் அவ்வாறு உணவு ஒதுக்கத்தினை பேணுதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ஒதுக்கத்தினைப் பேணுவமதற்கு முறையான ஒரு நடைமுறையினை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரிசி ஒதுக்கத்தீனைப் பேணுவதற்கு பொதுத் திறைசெரியிடமிருந்து ரூபா 1,996 மில்லியன் நிதி ஏற்பாடு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் வழங்கப்பட்ட ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு போதியதல்ல | உணவு ஒதுக்கத்தினைப் பேணும் முறைமையான ஒரு நடைமுறையினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சந்தையில் பொருட்களின் விலை வழக்கத்திற்கு மாற்றமாக அதிகரித்துள்ள | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அத்திவசியமான பொருட்களின் விலையைக் |

சந்தர்ப்பங்களில் காய்கறி, பழங்கள் உள்ளடங்கலாக அத்திவசியமான பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவதன் மூலம் வாழ்க்கைச் செலவினை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு 10 அத்தியவசியமான உணவு வகைகளை இறக்குமதி செய்வதற்கு சிபாரிசுகள் வழங்கப்பட்டிருந்தும் அவற்றில் சோளம் மாவு மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

கட்டுப்படுத்துவதற்கு முறையான ஒரு நடைமுறையினைப் பின்பற்றி அமுல்ப்படுத்துதல் வேண்டும். .